S.C. No: 91/2018
பெயர்: என். வைத்தியநாதன்
**அ.சா. 35**
13–08–2026
(1, 4, 7, 8 ஆகிய எதிரிகள் இறந்துவிட்டனர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் 2, 3, 5, 6 ஆஜரில்லை. 2, 3, 5, 6 ஆம் எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355–இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.07**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அ.சா.6 அருள்மொழி தனது கணவர் கடத்தப்பட்ட விவரம் செல்வம் தகவல் சொல்லித்தான் தெரிந்துக்கொண்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த செல்வத்தை இந்த வழக்கில் பட்டியல் சாட்சியாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல . விசாரித்துள்ளேன். அ.சா.6 அருள்மொழி, எதிரி மகேந்திரன் தன்னை பார்த்து உனது வீட்டுக்காரர் என்னை வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை, பணமும் கொடுக்கவில்லை என்று கோபமாக பேசியதாக நான் அவரை விசாரித்து வாக்குமூலம் வாங்கிய போது கூறியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார் . அவ்வாறு சம்பவம் நடந்தது எந்த மாதம் தேதி வருடம் என்று குறிப்பிட்டு அவர் நான் விசாரித்த போது சொல்லவில்லை என்றால் சரிதான் . 6 வது எதிரி மகேந்திரன் வசிப்பது பாபநாசம் தாலுக்கா , புளியங்குடி கிராமம் என்றால் சரிதான். இறந்து போன மதியழகன் வசித்தது மன்னார்குடி என்றால் சரிதான். அசேசம் என்ற ஊரில் ரோஜா நகர், பாரதிதாசன் தெருவில் தான் மதியழகன் வசித்து வந்தார் . புளயங்குடிக்கும் மன்னார்குடிக்கும் இடையில் எவ்வளவு தூரம் என்றால் சரியாக ஞாபகமில்லை . மதியழகன் கடத்தப்பட்டவுடன் அவரது உறவினர்களால் கடத்தப்பட்ட சங்கதி குறித்து எந்த போலிசுலும் புகார் கொடுக்கவில்லை என்றால் அது குறித்து ஞாபகமில்லை. எனது விசாரணையில் மதியழகன் பலபேரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி பணம் வாங்கி விட்டு அவர்களை

வெளிநாட்டுக்கு அனுப்பவில்லை என்பது குறித்து பல பேர் புகார் கொடுத்து மன்னார்குடி காவல் நிலையத்தில் நிலுவையில் இருந்தது குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது . எனது விசாரணையின் போது, இந்த வழக்கில் இறந்த மதியழகன் பலபேரை பணம் வாங்கிக்கொண்டு வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி விட்டு , அவர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பவில்லை என்பதால் அவர்கள் அவ்வப்போது வீட்டிற்கு வந்து சத்தம் போட்டுவிட்டு செல்வார்கள் என்ற விவரம் குறித்து அருள்மொழியின் வாக்குமூலத்தின் பேரில் தெரிந்துக்கொண்டேனா என்றால் ஆமாம். 6 வது எதிரி மகேந்திரனை நான் கைது செய்த பின்னர் , அவரை அடையாளம் காட்ட சாட்சி அருள்மொழியை கொண்டுவந்து இவர் தான் உங்கள் வீட்டிற்கு வந்து மிரட்டிய நபரா என்று அவரை அழைத்துவந்து அருள்மொழியிடம் அடையாளம் காட்டி கேட்கவில்லை என்றால் சரிதான் . பாஸ்போர்ட் இருந்தால் தான் ஒருவர் வெளிநாடு செல்ல முடியும் என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் பாஸ்போர்ட் மகேந்திரனின் பாஸ் போர்ட்டா என்றால் மகேந்திரன் பெயர் போட்டு மகேந்திரன் விலாசம் கண்டு காணப்பட்டுள்ளது. அந்த மகேந்திரனின் பாஸ்போர்ட்டின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு **எ.சா.ஆ.1. வரிசை (எண்ணிக்கைகள்–3) (எ.சா.ஆ.1 அரசு தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** ஆக இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படுகிறது . எ.சா.ஆ.1 க்கு முன்னரே மேற்படி மகேந்திரன் மற்றொரு பாஸ் போர்ட் வாங்கியிருக்க வாய்ப்பு இருக்கு என்று சாட்சி தானாக முன்வந்து சாட்சியமளிக்கிறார். எ.சா.ஆ–1 க்கு முன்னர் வேறு பாஸ் போர்ட் உள்ளதாகவோ எ.சா.ஆ.1 மீண்டும் புதுபிக்கப்பட்டதாகவோ எதுவும் குறிப்பு எ.சா.ஆ–1 இல் காட்டப்பட்டுள்ளதா என்றால் அது குறித்த சங்கதிகள் எதுவும் எ .சா.ஆ.1 இல் காட்டப்படவில்லை . பழைய பாஸ் போர்ட்

மகேந்திரனுக்கு இருந்தாலோ அல்லது இந்த பாஸ் போர்ட் அவருக்கு புதியது படுத்தப்பட்டிருந்தாலோ எ .சா.ஆ.1 இல அது குறித்து விவரம் காணப்படும் என்றால் அது குறித்து விவரம் எதுவும் எனக்கு தெரியவில்லை என்பதால் அது குறித்து எந்த விளக்கமும் அளிக்க இயலவில்லை. எ.சா.ஆ.1 12/08/2014 இல் தான் முதன் முதலாக 6 வது எதிரி மகேந்திரனால் பெறப்பட்டதாக காணப்படுகிறது என்றால் ஆமாம் . முதன் முதலாக அவரால் எப்போது பெறப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியவில்லை. எ.சா.ஆ.1 புதுப்பிக்கப்பட்ட பாஸ் போர்ட் அல்ல என்று சொன்னால் அது குறித்து விவரம் எனக்கு தெரியவில்லை . பாஸ் போர்ட் இல்லாத 6 வது எதிரி வெளிநாடு செல்வதற்காக இறந்து போன மதியழகனிடம் பணம் கொடுத்து ஏமாற்றப்பட்டார் எனவும் , அதனால் ஏற்பட்ட ஏமாற்றத்தினால் எதிரிகள் அனைவரும் விரோதம் கொண்டு மதியழகனை கொலை செய்துவிட்டனர் என்று கற்பனையாக இந்த வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . இறந்து போன மதியழகனுக்கு நிறைய விரோதிகள் உண்டு , அந்த விரோதிகளில் யார் கொலை செய்தார்கள் என்று கண்டுபிடிக்க முடியாததால் , எதிரிகளுக்கு எதிராக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை புலன் விசாரணை செய்த வகையில் , மேற்படி கண்டுபிடிக்கப்பட்டதாக சொல்லப்படும் உடலின் தலையை கண்டுபிடிக்க ஏதேனும் முயற்சி எடுத்தேனா என்றால் எடுத்தேன் . சாட்சி தானாக முன்வந்து, மேற்படி நபரின் தலையானது வெண்ணாற்றில் தலையை மட்டும் தூக்கி எறிந்துவிட்டதாக , சூளை என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டு என்னிடம் கூறியதன் அடிப்படையில் வெண்ணாற்றில் போலிசாராகிய நாங்கள் இறங்கி தேடி பார்த்தோம். தலை கிடைக்கவில்லை. தண்ணீரில அடித்து சென்றதால் தலை கிடைக்கவில்லை என்று சாட்சி தானாக முன்வந்து சாட்சியமளிக்கிறார் .

மேற்படி தலையை தேடி வெண்ணாற்றில் போலிசாராகிய நாங்கள் அனைவரும் குதித்து தண்ணீர் அதிகமாக ஓடிய சமயத்தில் தேடிய போது, அந்த தலை கிடைக்கவில்லை என்ற சங்கதி குறித்து நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதியில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் அது குறித்து நான் முதல் விசாரணையில் விவரமாக சொல்லவில்லை. வெண்ணாற்றின் எந்த இடத்தில் குறிப்பிட்டு எந்தயிடத்தில் வைத்து தலையை தேடினோம் என்று சொல்கிறேன் என்றால் நீடாமங்கலம் டூ கொரடாச்சேரி போகும் ரோட்டில் அருகில் இருந்த வெண்ணாற்றில் மேற்படி இந்த வழக்கில் இறந்த மதியழகனின் தலையை நாங்கள் தேடினோம் . மேற்படி ஆற்றில் இறங்கி இறந்த மதியழகனின் தலையை தேடிய அனைத்து காவலர்களின் வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேனா என்றால் இல்லை . உண்மையில் மேற்படி இறந்த மதியழகனின் தலையை தேடி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் தான் மேற்படி மதியழகனின் தலையை தேடிய போலிசாரின் வாக்குமூலங்களை நான் இந்த வழக்கில் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வெண்ணாறு எதில் போய் இறுதியாக கலக்கிறது என்றால் அது குறித்து எனக்கு சரியாக ஞாபகமில்லை. தண்ணீர் தலையை தேடுவதற்கு தீயணைப்பு வீரர்களின் உதவியை நான் நாடவில்லை என்றால் சரிதான் . அ.சா.6 அருள்மொழி என்னிடம் கொடுத்த அவரது வாக்குமூலத்தில் , மகேந்திரன் தன் நண்பரிடம் அவரது கணவர் வெளிநாட்டுக்கு அனுப்புவதாக சொல்லி பணம் வாங்கிவிட்டார், அதை கேட்கத்தான் மகேந்திரன் வந்தார் என்று எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான் . எந்த எதிரியும் நான் சொல்வது போல் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் அதன் தொடர்ச்சியாக தடயப்பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவிலலை என்றாலும் சொன்ன நாள் , நேரம்,

இடத்தல் எதிரிகள் யாரையும் கைதும் செய்யப்படவில்லை என்றும் , வீட்டில் இருந்த எதிரிகளை அழைத்து வந்து அவர்களுக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல . இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலங்கள் , கைப்பற்றப்பட்டுள்ளதாக சொல்லப்படும் மகஜர்கள் எதுவும் எனது கைப்பட எழுதப்படவில்லை என்பதால் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு தகுந்தாற்போல் தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல . சரியான முறையில் இந்த வழக்கில் நான் புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக வழக்கு புலன் விசாரரணை தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.49**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.